**ஜூலை – 30**

# TNPSC துளிகள்

- இந்திய இராணுவம் மற்றும் சிங்கப்பூர் ஆயுதப்படைகள் இணைந்து இராஜஸ்தானின் பாலைவனத்தில் 'போல்ட் குருசேத்ரா 2025' என்ற கூட்டுப் பயிற்சியைத் தொடங்கின.
- விண்வெளி அறிவியலுக்கு அளித்த மிகச் சிறப்பான பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக, இஸ்ரோவின் தலைவர் V. நாராயணனுக்கு G. பிர்லா நினைவு விருதினை G.பிர்லா தொல்பொருள், வானியல் மற்றும் அறிவியல் நிறுவனம் வழங்கியுள்ளது.
- சர்வதேசப் புக்கர் பரிசு பெற்ற இந்தி மொழி எழுத்தாளர் கீதாஞ்சலி ஸ்ரீயின் 'Once Elephants Lived Here' என்ற புதினத்திற்கு 2025 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க PEN மொழி பெயர்ப்பு விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்திரா காந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் (IGNOU) துணை வேந்தராக உமா காஞ்சிலால் நியமிக்கப் பட்டுள்ளதையடுத்து, 1985 ஆம் ஆண்டில் அப்பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதிலிருந்து இந்தப் பதவியை வகிக்கும் முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- ஒவ்வொரு ஆண்டும், ஜூலை 28 ஆம் தேதி உலக இயற்கை வளங்காப்பு தினமாகக் கொண்டாடப்படுகிறது, இது சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உலகளாவிய அளவில் நினைவூட்டுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பொது விநியோக திட்டத்தின் விரிவாக்கம்




- தமிழ்நாடு அரசானது, நான்கு ஆண்டுகளில் 789 நிரந்தர மற்றும் 1,605 தற்காலிக

கடைகள் உட்பட 2,394 ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யும் கடைகளை நிறுவியது.


❖ ரேஷன் பொருட்கள் விநியோகத்தை எளிதாக்குவதற்காக UPI பரிவர்த்தனைகள் அறிமுகப் படுத்தப்பட்டன.

❖ 2024 ஆம் ஆண்டில் 2.19 கோடிக்கும் அதிகமான அரிசி வழங்கீட்டுக் குடும்ப அட்டை தாரர்களுக்கும், 2025 ஆம் ஆண்டில் 1.94 கோடிக்கும் அதிகமானவர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்புகள் விநியோகிக்கப்பட்டன.

❖ 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஃபெங்கல் புயலுக்குப் பிறகு, கடலூர், கள்ளக்குறிச்சி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீணாகாத உலர் ரேஷன் பொருட்கள் வழங்கப்பட்டன.

❖ சென்னை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதி உதவி மற்றும் நிவாரணப் பொருட்கள் வழங்கப் பட்டன.

## சோழ மன்னர்களுக்கான சிலைகள்




❖ தமிழ்நாட்டின் கங்கைகொண்ட சோழபுரம் கோவிலில் நடந்த ஆடி திருவாதிரை விழாவில் பிரதமர் உரையாற்றினார்.

❖ கி.பி. 1014 முதல் 1044 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்த முதலாம் இராஜேந்திர சோழனைக் கௌரவிக்கும் வகையில் ஒரு நினைவு நாணயத்தினையும் அவர் வெளியிட்டார்.

❖ தமிழ்நாட்டில் இராஜராஜ சோழன் மற்றும் முதலாம் இராஜேந்திர சோழனுக்குப் பிரம்மாண்ட சிலைகள் நிறுவப்படும் என்று பிரதமர் அறிவித்தார்.

❖ முதலாம் இராஜேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரத்தைப் பேரரச தலைநகராக நிறுவி, புகழ்பெற்ற கோயிலைக் கட்டினார்.

❖ சோழர்கள் மற்றும் 63 நாயன்மார்களின் துறவிகள் வரலாற்று ரீதியாக ஆதரிக்கும் தமிழ் சைவ பக்தி பாரம்பரியத்தையும் மதிப்பூட்டும் விதமாக ஆதி திருவாதிரை விழா கொண்டாடப்படுகிறது.

# தேசியச் செய்திகள்

## 'ஏக் பெட் மா கே நாம்' முன்னெடுப்பு

- பிரதமர் தனது ஐக்கியப் பேரரசு பயணத்தின் போது நோர்போக்கில் உள்ள சாண்ட்ரிங்ஹாம் எஸ்டேட்டில் மூன்றாம் சார்லஸ் மன்னருக்கு ஒரு மரக்கன்றை பரிசளித்தார்.
- இந்தச் செய்கையானது 'ஏக் பெட் மா கே நாம்' எனும் இந்தியாவின் பசுமை முன்னெடுப்பின் ஒரு பகுதியாகும் என்பதோடு இது பூமித் தாய்/ தாய்மார்கள் மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புக்கு கௌரவமளிக்கும் வகையில் மரம் நடுவதை ஊக்குவிக்கிறது.
- பரிசளிக்கப்பட்ட இந்த மரக்கன்று, டேவிடியா இன்வோக்ரடா 'சோனோமா' (சோனோமா புறா மரம்), முன் கூட்டியே பூக்கும் மற்றும் வெள்ளைப் பூவடிச் செதில்களுக்குப் பெயர் பெற்றது.




## மாணவர் மனநலம் குறித்த உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்கள்

- உச்ச நீதிமன்றமானது, அதிகரித்து வரும் மாணவர் தற்கொலைகள் மற்றும் மனநல நெருக்கடிகளைச் சமாளிக்க 32 மற்றும் 141வது சரத்துகளின் கீழ் 15 இடைக்காலமான கட்டாய வழிகாட்டுதல்களை வெளியிட்டது.
- இந்த வழிகாட்டுதல்கள் சுக்தேப் சாஹா மற்றும் ஆந்திரப் பிரதேச மாநில அரசு இடையிலான வழக்கின் போது வழங்கப்பட்டது.
- இந்த நெருக்கடியை இந்தியாவின் கல்வி முறையில் "கட்டமைப்புச் சீர்குலைவு" என்பதற்கான அறிகுறியாக நீதிமன்றம் குறிப்பிட்டது.
- 2022 ஆம் ஆண்டில் 13,000க்கும் மேற்பட்ட மாணவர் தற்கொலைகள் நிகழ்ந்தன, அவற்றில் 2,200 தேர்வில் தோல்வி அடைந்தததுடன் தொடர்புடையவை (தேசிய குற்றப் பதிவு வாரியம்).
- அனைத்துக் கல்வி நிறுவனங்களும் UMMEED (புரிதல், ஊக்குவித்தல், நிர்வகித்தல்,

பச்சாதாபம், அதிகாரமளித்தல், மேம்படுத்துதல்), MANODARPAN (கல்வி அமைச்சகத்தின் மனநல முன்னெடுப்பு) மற்றும் தேசியத் தற்கொலை தடுப்பு உத்தி போன்ற தேசிய திட்டங்களுடன் இணைக்கப்பட்ட மனநலக் கொள்கையை செயல்படுத்த வேண்டும்.

- 100+ மாணவர்களைக் கொண்ட நிறுவனங்களில் குறைந்தது ஒரு பயிற்சி பெற்ற மனநல ஆலோசகரையாவது கட்டாயமாக நியமிக்க வேண்டும்.
- குழு பிரிப்பு, பொதுவெளி அவமானம் மற்றும் நடைமுறைக்கு மாறான கல்வி இலக்குகள் போன்ற நடைமுறைகள் கட்டாயமாக தடை செய்யப் பட்டுள்ளன.
- Tele-MANAS (மாநிலங்கள் முழுவதும் தொலைபேசி வழியான மனநல உதவி மற்றும் வலையமைப்பு) உள்ளிட்ட உதவி எண்கள் வளாகங்கள் மற்றும் விடுதிகளில் தெரியும் படி காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
- நெருக்கடி நிலை மீட்பு மற்றும் முன் எச்சரிக்கை அறிகுறிகள் குறித்து அனைத்து ஊழியர்களுக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மனநலப் பயிற்சி கட்டாயம் ஆகும்.
- நிறுவனங்கள் SC, ST, OBC, EWS, LGBTQ+ மற்றும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு உள்ளடக்கிய, பாகுபாடற்ற ஆதரவை உறுதி செய்ய வேண்டும்.
- பாலியல் வன்கொடுமை, கேலிவதை மற்றும் உருவக் கேலி அடிப்படையிலான பாகுபாட்டை உடனடி உளவியல் உதவியுடன் புகாரளிக்க இரகசிய அமைப்புகள் இருக்க வேண்டும்.
- சத்ருகன் சவுகான் மற்றும் இந்திய ஒன்றியம இடையிலான வழக்கில் உறுதிப்படுத்தப் பட்டபடி, கண்ணியம் மற்றும் சுயாட்சியை உள்ளடக்கிய வாழ்க்கைக்கான அரசியலமைப்பு உரிமையின் ஒரு பகுதியாக மனநலம் உள்ளது.




## சர்வதேசச் செய்திகள்

### தென்னாப்பிரிக்காவின் இனப்படுகொலை வழக்கு

- 1948 ஆம் ஆண்டு இனப்படுகொலை உடன்படிக்கையின் கீழ், இஸ்ரேல் காசாவில்


இனப்படுகொலை செய்ததாக குற்றம் சாட்டி, சர்வதேச நீதிமன்றத்தில் (ICJ) தென்னாப்பிரிக்காவின் வழக்கில் பிரேசில் தலையிட உள்ளது.

- பிரேசில் ஆனது நடைபெற்று வரும் அட்டூழியங்களைக் கண்டித்ததோடு, சர்வதேசச் சமூகம் தார்மீக தெளிவின்மை மற்றும் அரசியல் புறக்கணிப்புக்கு எதிராக செயல்பட வலியுறுத்துகிறது.
- காசா மற்றும் மேற்குக் கரையில் மீண்டும் மீண்டும் வன்முறை வெடிப்பது மற்றும் பட்டினி நிலையை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவதை பிரேசில் விமர்சித்து, பாலஸ்தீன உரிமைகளைப் பாதுகாக்க அழைப்பு விடுக்கிறது.
- இஸ்ரேலின் சர்வதேச சட்ட மீறல்களை எடுத்துக்காட்டி ஸ்பெயின், துருக்கி மற்றும் அயர்லாந்து உள்ளிட்ட பல நாடுகளும் இதில் தலையிட முயல்கின்றன.
- இனப்படுகொலையைத் தடுக்கவும், மனிதாபிமான உதவிகளை அணுக அனுமதிக்கவும் ICJ முன்பு இஸ்ரேலுக்கு உத்தரவிட்டது.




## பாலஸ்தீன அரசிற்கு அங்கீகாரம் - பிரான்சு

- மஹ்மூத் அப்பாஸுக்கு எழுதிய கடிதத்தில் பாலஸ்தீன அரசைப் பிரான்சு அரசு அங்கீகரிப்பதை ப்பிரான்சின் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் உறுதிப்படுத்தினார்.
- இந்த அரசுமுறை நடவடிக்கையை மேற்கொள்ளும் முதல் G7 (ஏழு நாடுகள் கொண்ட குழு) நாடாகவும், முக்கிய மேற்கத்திய நாடாகவும் பிரான்சு மாறுகிறது.
- அடுத்த மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் மக்ரோன் இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பினை வெளியிடுவார்.
- 2024 ஆம் ஆண்டில் ஸ்பெயின், அயர்லாந்து மற்றும் நார்வே ஆகிய நாடுகளின் அங்கீகரித்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- இரு நாடுகள் தீர்வை வலுப்படுத்தவும், மற்ற முடிவெடுக்காத நாடுகளும் இதே போல் செயல்பட ஊக்குவிக்கவும் பிரான்சு முயல்கிறது.




## UNSC சபையின் அமைதியான சர்ச்சை தீர்வு




- சர்வதேச சர்ச்சைகளுக்கு / தகராறுகளுக்கு அமைதியான தீர்வு வழிமுறைகளை வலுப்படுத்துவதற்காக தீர்மானம் 2788 என்ற தீர்மானத்தினை ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை (UNSC) ஒருமனதாக ஏற்றுக் கொண்டது.
- ஐ.நா. சாசனத்தின் 33வது பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள முறைகளைத் திறம்பட பயன்படுத்துவதற்கு, பேச்சுவார்த்தை, மத்தியஸ்தம், நடுவண் மற்றும் நீதித்துறை தீர்வு ஆகியவற்றினை உள்ளடக்கிய இந்தத் தீர்மானமானது அனைத்து ஐ.நா. உறுப்பினர் நாடுகளையும் வலியுறுத்துகிறது.
- சர்ச்சைகளை மிகவும் அமைதியான முறையில் தீர்ப்பதற்கான பொருத்தமான நடைமுறைகள் அல்லது சரிசெய்தல் முறைகளைப் பரிந்துரைக்கும் UNSC சபையின் அதிகாரத்தை இது மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## வாகனங்களுக்கான மூங்கில் அடிப்படையிலான சுற்றுச்சூழல் கலவை

- கௌஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், நெகிழிக்கான மாற்றாக பம்புசா துல்டா மற்றும் மக்கும் தன்மை கொண்ட உயரி பலபடி சேர்மங்களைப் பயன்படுத்தி மூங்கில் பலபடி சேர்மக் கலவையை உருவாக்கியது.
- வாகனத்தின் முகப்பு பகுதிகள், கதவு தகடுகள் மற்றும் இருக்கை மெத்தைகள் போன்ற வாகன உட்புற கூறுகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் கலவையானது அதிக வலிமை, வெப்ப நிலைத்தன்மை மற்றும் குறைந்த ஈரப்பதம் உறிஞ்சும் தன்மையினைக் கொண்டுள்ளது.
- மூங்கில் இழைகள் மற்றும் உயிரி அடிப்படையிலான அல்லது பெட்ரோலிய அடிப்படையிலான எபோக்சி பாலிமர்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட நான்கு உருவாக்கங்கள் ஆனது நீடிப்புத் தன்மை, நீர் எதிர்ப்பு திறன் மற்றும் செலவு உள்ளிட்ட 17 அளவுருக்களில் சோதிக்கப்பட்டன.
- இந்தச் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருள் ஆனது மின்னணுவியல், மரச்சாமான்கள், பொதி கட்டுதல் மற்றும் நிலையான கட்டுமானத்தில் சாத்தியமான பயன்பாடுகளைக் கொண்டுள்ளது.




## GRS 1915+105 கருந்துளை

- 28,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ள GRS 1915+105 கருந்துளையானது மாறு நிலையிலான மற்றும் அசாதாரண நடத்தையை வெளிப்படுத்துகிறது.
- இது 12 சூரியனின் நிறையிலான கருந்துளை மற்றும் ஒரு துணை நட்சத்திரத்துடன் கூடிய கருந்துளை ஊடு கதிர் இருமை அமைப்பு ஆகும்.
- 2015 ஆம் ஆண்டில் விண்ணில் ஏவப்பட்ட இந்தியாவின் ஆஸ்ட்ரோசாட், இந்த கருந் துளையை தொடர்ந்து கண்காணித்து வருகிறது.
- GRS 1915+105 கருந்துளையிலிருந்து வரும் ஊடுகதிரின் பிரகாசம் ஆனது சில நூறு வினாடிகள் நீடிக்கும் குறைந்த ('dip') மற்றும் உயர் ('non-dip') கட்டங்களுக்கு இடையில்

ஏற்ற இறக்கமாக இருக்கும்.

- அதிக பிரகாசமான கட்டங்களின் போது, நிலையற்ற கால அளவு கொண்ட சீரான வடிவிலான அலைவு (Quasi-periodic Oscillations- QPOs) எனப்படும் விரைவான ஊடு கதிர் ஒளிர்வுகள் வினாடிக்கு சுமார் 70 முறை நிகழ்கின்றன.
- இது கருந்துளையைச் சுற்றியுள்ள ஒரு சிறிய, அதிக வெப்பமடைந்த செய்யப்பட்ட பிளாஸ்மா கொரோனாவுடன் தொடர்புடையது.
- இதில் பிரகாசம் குறையும் போது, கொரோனா விரிவடைந்து குளிர்ச்சியடைகிறது, இதனால் ஒளிர்வுகள் மறைந்துவிடும்.
- இந்த வேகமான QPO சமிக்ஞைகளுக்கு அலைவுறும் கொரோனா அடுக்கு தான் காரணம் என்று இது கூறுகிறது.




## டேஃபன் பிளாக்-4




- துருக்கியின் டேஃபன் பிளாக்-4 என்பது பாதுகாப்பு உற்பத்தி நிறுவனமான ரோகெட்சன் உருவாக்கிய அதன் முதல் அதி மீயொலி உந்துவிசை எறிகணை ஆகும்.
- 800 கிலோ மீட்டர் செயல்பாட்டு வரம்பைக் கொண்டுள்ள இந்த எறிகணையின் செயல்பாட்டு வரம்பானது 1,000 கிலோ மீட்டர் வரை நீட்டிக்கக் கூடியது மற்றும் மேக் 5 வேகத்தை தாண்டி இது பயணிக்கும்.

- இது 5 மீட்டருக்குள்ளான தாக்குதல் துல்லியத்திற்காக GPS + GLONASS உதவியுடன் கூடிய நிலைம வழி செலுத்தல் அமைப்பை (INS) பயன்படுத்துகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## கிளாவெலினா ஆசிபாண்டே


- ஜப்பானின் குமேஜிமா தீவுக்கு அருகில் கிளாவெலினா ஆசிபாண்டே என்ற புதிய கடல் வாழ் கடற்குடுவை/ஸ்கர்ட் இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- இது 20 மில்லிமீட்டர் நீளம் கொண்ட ஒரு சிறிய நீருக்கடியில் வாழும் பாண்டா போல் தெரிகிறது.
- பவளப்பாறைகளுக்கு இடையில் வாழ்கின்ற இந்த இனமானது கிளாவெலினா என்ற இனத்தைச் சேர்ந்தது.
- ஆசிபாண்டே என்ற இனத்தின் பெயர் ஆனது அதன் தோற்றத்திற்கு ஒத்திருக்கின்ற "பாண்டா எலும்புகள்" என்று பொருள்படும்.




## மைக்கோரைசல் பூஞ்சைகளின் உலகளாவிய ஹாட்ஸ்பாட்கள்


- உலகளாவியப் பூஞ்சை வேர்/மைக்கோரைசல் பூஞ்சை இனமிகு பகுதிகளில் சுமார் 90 சதவீதத்திற்கும் மேற்பட்டவை அதிகாரப்பூர்வமாக பாதுகாக்கப்பட்டப் பகுதிகளுக்கு வெளியே உள்ளன என்பதை நிலத்தடி வலையமைப்புகளின் பாதுகாப்புச் சங்கத்தின் (SPUN) நிலத்தடி இனங்கள் தகவல் தொகுப்பு வெளிப்படுத்துகிறது.
- இந்த பூஞ்சைகள் ஊட்டச்சத்து சுழற்சி, மண் ஆரோக்கியம், தாவர வளர்ச்சி மற்றும் நீண்ட கால கார்பன் சேமிப்புக்கு அவசியமாகும்.
- மைக்கோரைசல் பூஞ்சைகள் 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட தாவர இனங்களுடன் கூட்டு வாழ்வு தொடர்புகளை உருவாக்குகின்றன மற்றும் மண்ணில் உள்ள நுண்ணுயிர் உயிரியலில் 30% வரை பங்கு கொண்டுள்ளன.
- அவை பாஸ்பரஸ் போன்ற மிகவும் முக்கியமான ஊட்டச்சத்துக்களை உறிஞ்சுவதில் தாவரங்களுக்கு உதவுவதோடு, ஒட்டு மொத்தமான தாவர ஆரோக்கியத்தையும் மண் வளத்தையும் ஆதரிக்கின்றன.

- அவை ஆண்டுதோறும் உலகளாவிய புதைபடிவ எரிபொருள் உமிழ்வுகளில் மூன்றில் ஒரு பங்கான 13 பில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடை ($CO_2$) செயலாக்குவதன் மூலம் கார்பன் பிரித்தெடுப்பதில் குறிப்பிடத் தக்க பங்களிப்பை வழங்குகின்றன.
- SPUN ஆனது உலகளாவிய மைக்கோரைசல் பன்முகத் தன்மையை வரைபடமாக்கும் இயந்திர கற்றல் மாதிரிகளைப் பயிற்றுவிக்க 130 நாடுகளிலிருந்து சுமார் 25,000க்கும் மேற்பட்ட புவியியல் மண் மாதிரிகள் மற்றும் சுமார் 2.8 பில்லியன் பூஞ்சை DNA வரிசைகளைப் பயன்படுத்தியது.
- மின்னணு வழித் தகவல் தொகுப்பு ஆனது ஆர்பஸ்குலர் மைக்கோரைசல் (AM) பூஞ்சை மற்றும் எக்டோமிகோரைசல் (EcM) பூஞ்சை எனும் இரண்டு வகையான மைக்கோரைசல் பூஞ்சைகளில் கவனம் செலுத்துகிறது.
- மூன்றாவது வகையான் எரிகாய்டு மைக்கோரைசல் (ErM) பூஞ்சை, மாதிரி கிடைப்பதற்கான குறைந்த வைப்பின் காரணமாக விலக்கப் பட்டது.
- AM பூஞ்சை பன்முகத் தன்மை இனமிகு பகுதிகள் பிரேசிலிய செராடோ சவன்னாக்கள் / புல்வெளிகள், தென்கிழக்கு ஆசியாவின் வெப்பமண்டலக் காடுகள் மற்றும் மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள கினியா காடுகளில் கணிக்கப்பட்டன.
- சைபீரியா மற்றும் கனடாவில் உள்ள வடக்கு போரியல் காடுகள், மேற்கு அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ள ஊசியிலை காடுகள் மற்றும் மத்திய ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க கிரேட் லேக்ஸ் பகுதியில் மித வெப்பக் கலப்பு காடுகள் முழுவதும் EcM பூஞ்சையின் செழுமை நிறைந்த இனமிகு இடங்களாக அடையாளம் காணப்பட்டன.




## சுந்தரவனத்தில் ஓநாய் சிலந்தி இனங்கள்

- சுந்தரவன கழிமுகப் பகுதிகளில் உள்ள சாகர் தீவில் ஒரு புதிய வகை ஓநாய் சிலந்தியை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இங்கு புதிதாக அடையாளம் காணப்பட்ட இனமான பிரட்டுலா அக்குமினாட்டா என்பது லைகோசிடே குடும்பத்தைச் சேர்ந்தது.
- இது இந்தியாவில் பிரட்டுலா இனத்தின் முதல் பதிவு செய்யப் பட்ட இருப்பைக் குறிக்கிறது.




# மாநிலச் செய்திகள்

## நீதித்துறையில் முதல் செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டுக் கொள்கை




- கேரள உயர் நீதிமன்றம் ஆனது பொறுப்பான மற்றும் வரையறுக்கப்பட்டப் பயன்பாட்டை மையமாகக் கொண்ட இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) பயன்பாடு குறித்த நீதித்துறை கொள்கையை வெளியிட்டது.
- இந்தக் கொள்கையானது மனித மேற்பார்வை மற்றும் முறையான பதிவு பராமரிப்பு ஆகியவற்றின் கீழ் வழக்குப் பட்டியலிடல் போன்ற நிர்வாகப் பணிகளுக்கு மட்டுமே செயற்கை நுண்ணறிவு கருவிகளைப் பயன்படுத்த அனுமதிக்கிறது.

- இது செயற்கை நுண்ணறிவு கொண்டு சட்ட ஆவணங்களை வரைவதைத் தடை செய்கிறது மற்றும் மொழிபெயர்ப்புகள் மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகளுக்கான சரி பார்ப்பைக் கட்டாயப்படுத்துகிறது.
- கேரள உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு கருவிகளை மட்டுமே நீதிமன்றம் தொடர்பான பணிகளில் பயன்படுத்த முடியும்.

# முக்கிய தினங்கள்

## கார்கில் விஜய் திவாஸ் 2025 - ஜூலை 26

- 1999 ஆம் ஆண்டு கார்கில் போரில் இந்திய ஆயுதப் படைகளின் வெற்றியை நினைவு கூரும் வகையில் இது அனுசரிக்கப்படுகிறது.
- இது விஜய் நடவடிக்கையின் 26வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இந்த நடவடிக்கையின் போது, பாகிஸ்தான் வீரர்கள் கார்கிலில் முக்கியப் பகுதிகளை ஆக்கிரமித்ததையடுத்து இந்தியா அப்பிரதேசத்தை மீட்டெடுத்தது.
- இமயமலையில் கடுமையான வானிலை மற்றும் மோசமான நிலப்பரப்பில் போராடிய வீரர்களின் துணிச்சல் மற்றும் தியாகத்திற்கு கௌரவம் அளிக்கும் வகையில் கார்கில் விஜய் திவாஸ் நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.




## மத்திய சேமக் காவல் படை ஸ்தாபன தினம் 2025 - ஜூலை 27

- மத்திய சேமக் காவல் படையானது முதன் முதலில் 1939 ஆம் ஆண்டில் அரசப் பிரதிநிதியின் காவல்படையாக அமைக்கப்பட்டது.
- 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதியன்று நிறைவேற்றப்பட்டப் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் இந்த படை மறுசீரமைக்கப்பட்டு CRPF என மறுபெயரிடப்பட்டது.
- தற்போது இது உலகின் மிகப்பெரிய துணை ராணுவப் படையாக உருவெடுத்துள்ளது.




## உலக கல்லீரல் அழற்சி நோய் தினம் 2025 - ஜூலை 28

❖ ஹெபடைடிஸ் (கல்லீரல் அழற்சி நோய்) என்பது கல்லீரலில் வீக்கத்தை ஏற்படுத்தும் ஒரு நோய் நிலையாகும், இது கடுமையான கல்லீரல் சேதம் மற்றும் கல்லீரல் புற்றுநோய்க்கு வழிவகுக்கும்.

❖ டாக்டர் பருச் சாமுவேல் பிளம்பெர்க் என்பவர் 1967 ஆம் ஆண்டு ஹெபடைடிஸ் பி வைரஸைக் கண்டுபிடித்தார், அதைத் தொடர்ந்து அதற்கான முதல் தடுப்பூசியையும் உருவாக்கினார்.

❖ எனவே, அவரது பிறந்த தேதியான ஜூலை 28, அவரது சாதனை மற்றும் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக உலக ஹெபடைடிஸ் தினமாகக் நியமிக்கப்பட்டது.

❖ 2025 ஆம் ஆண்டிற்கான கருத்துரு " Let's Break It Down" என்பதாகும்.




## சர்வதேச புலிகள் தினம் 2025 - ஜூலை 29

❖ உலகளவில் புலிகள் வாழும் அனைத்து நாடுகளையும் ஒன்றிணைத்து, அவற்றின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

❖ இது முதன்முதலில் 2010 இல் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்-இல் நடைபெற்ற புலிகளுக்கான உச்சி மாநாட்டில் நிறுவப்பட்டது.

❖ இந்தியாவில் 3,682 இவ்வகை பெரும்பூனைகள் உள்ளன.

❖ 2025 ஆம் ஆண்டிற்கான கருத்துரு " Securing the future of Tigers with Indigenous Peoples and

Local Communities at the heart" என்பதாகும்.




✯ ✯ ✯ ✯ ✯ ✯ ✯ ✯ ✯ ✯